# பேராயர் அருட்திரு இராயப்பு யோசேப் அவர்களின் மறைவினையொட்டி மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம் (CHRD) விடுத்துள்ள அறிக்கை

பேராயர் அருட்திரு இராயப்பு யோசேப் ஆண்டகையின் மறைவு உலகெங்கணும் வாழும் தமிழ் மக்கள் அனைவரையும் ஆற்றொணா சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. கடந்த தசாப்தங்களில் யுத்தத்தின் போதும், யுத்தம் முடித்த பின்னரும் இலங்கை வாழ் தமிழ் மக்கள் சந்தித்த அனைத்து சவால்களை எதிர் கொண்டு அயாராது போராடிய செயல் வீரன். எங்கெங்கு தமிழ் மக்களின் உரிமைகளுக்குப் பாதிப்பு ஏற்பட்ட போதும் நேரடியாக தலையிட்டு உரிய அதிகாரிகளுடன் கண்டிப்பான பேச்சு வார்த்தைகள் நடத்தி அவற்றிற்குரிய தீர்வுகளைப் பெறுவதற்கு எற்றுமே அவர் தயங்கியதில்லை. ஆன்மீகம் சார்ந்த ஒரு மதத் தலைவராக இருந்து போதும் மதங்களின் எல்லைகளைத் தாண்டி அனைத்து மக்களின் நலன்களையும் உரிமைகளையும் பாதுகாப்பதற்கான முனைப்புடன் செயற்பட்டமையினால் சகல மக்களின் அன்பையும் ஆதரவினையும் அபரிதமாகப் பெற்றிருந்த ஒரு உன்னதமான மனிதராகத்திகழ்ந்தார் இராயப்பு யோசேப் ஆண்டகை.

போர்காலத்தின் உச்சக்கட்டத்தில் தமிழ்மக்களை பிரதிநிதித்துவப்படுத்திய அனைத்து அரசியல் தலைவர்களும் பிரதிநிதிகளும் தங்கள் கையாலாகாத்தனத்தினால் பாராமுகமாயிருந்த வேளையில் மக்களோடு மக்களாக உறவாடி யாவரினதும் அபிமானத்தை பெற்றிருந்தவர். ஏந்த ஒரு அரசியல் தலைவரோ, வெளிநாட்டு இராஜதந்திரிகளோ, தூதுவர்களோ, உயர் அதிகாரிகளோ தமிழ் மக்களின் நிலமை பற்றி அறிந்து கொள்வதற்கான தேவை ஏற்பட்டால் மன்னார் மறைமாவட்ட ஆயர் இல்லத்துக்கு விசேட யாத்திரை சென்ற விடயம் தற்செயலாக ஏற்பட்ட ஒன்றல்ல. தனது துணிச்சலினாலும் கொள்கைப்பற்றினாலும் தமிழ்த்தேசியத்தின்பால் கொண்டிருந்த பற்றுதியினாலும் பேராயர் இராயப்பு யோசேப் ஆண்டகை தன்னிகரற்ற தலைமைப்பொறுப்பினை ஏற்றிருந்தார். மக்கள் தமக்கான தலைமையின்றி அரசியல் அநாதைகளாக ஆக்கப்பட்டிருந்த சமயத்தில், அவர்கள் சார்பில் குரல்கொடுக்க யாருமில்லாத காலகட்டத்தில் உருவாகியிருந்த அரசியல் சூனியவெளியை நிரப்புவதற்கும் குரல்கொடுப்பதற்கும் தமது சார்பில் போராடிய ஒரு அரசியல் தலைவராகவே இலங்கையின் தமிழ்மக்கள் அவரை அங்கீகரித்திருந்தார்கள்.

அரசியல் வர்க்கத்தினராலோ, இரணுவத்தினாராலோ, காவல்துறையினராலோ, பொதுமக்களுக்கு அநீதி இழைக்கப்பட்ட போதெல்லாம் அந்த ஸ்தானத்துக்கே சென்று நேரடித் தலையீடு செய்து நியாயத்தைப் பெறுவதற்கு முன் நின்றவர். 2001ம் ஆண்டில் மன்னார் பொலிஸ் நிலையமொன்றில் தமிழ்யுவதிகள் இருவர் காவல்துறையினராலும் கடற்படையினராலும் பாலியல் ரீதியாகச் சித்திரவதை செய்யப்பட்ட போது பாராளுமன்ற உறுப்பினர்களோ வேறோருவரோ அதைக் கையாளுவதற்குத் திராணியற்றிருந்த வேளையில் பயமோ தயக்கமோ சிறிதுமின்றி காவல் நிலையத்திலும் சிறைச்சாலையிலும் சென்று பார்வையிட்டு, அவர்களுக்கு நேர்ந்திருந்த அவலங்களை வெளியுலகுக்குக்கொண்டு வந்தார். பேராயரின் தலையீட்டினைத் தொடர்ந்து சட்ட

நடவடிக்கை எடுக்கப்பட்டு மேற்படி யுவதிகள் விடுதலை செய்யப்பட்டது மட்டுமன்றி, அக்கிரமங்கள் புரிந்த பாதுகாப்புத்துறையினர் அடையாள அணிவகுப்பில் அடையாளம் காணப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள். பேராயர் என்ற ரீதியில் தமக்கிருந்த அந்தஸ்தினை உபயோகித்து மக்கள்பணி புரிந்த பேராயர் இக்காலகட்டத்தில் சட்டத்தை மீறி நடக்கும் அதிகாரிகளுக்கும் இராணுவத்தினருக்கும் ஒரு தடைக்கல்லாகத் திகழ்ந்தவர் என்பது மிகையல்ல. கற்றறித்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (LLRC) முன்னிலையிலும் ஏனைய அமைப்புக்கள் முன்னிலையிலும் மிகநுட்பத்துடன் ஆணித்தரமாக மொத்தத்தில் 146,769 நபர்கள் வன்னிப்பிரதேசத்தில் யுத்தமுடிவின் போது கொல்லப்பட்டிருக்கிறார்கள் அல்லது காணமலாக்கப்பட்டனர் என்ற விபரங்களைப் புள்ளி விபரங்களுடன் உறுதியாக எடுத்துரைத்தார். பேராயர் அளித்த இச்சாட்சியம் இன்றும் தமிழ் மக்கள் இனச்சுத்திகரிப்புக்கு உள்ளாகினார் என்ற உண்மையயை வெளியுலகத்துக்குப் பறைசாற்றி நிற்கின்றது.

இலங்கை அரசினாலும் அரசபடைகளினாலும் தமிழ்மக்களுக்கு இழைக்கப்பட்ட அக்கிரமங்களை உள்நாட்டிலும் சர்வதேச அரங்குகளிலும் வெளிக்கொணர்ந்தமையைப் பொறுத்துக்கொள்ளமுடியாத பெரும்பான்மை இனவாதிகள் பேராயர் அருட்திரு இராயப்பு யோசேப் அவர்களுக்கு இனவாத முத்திரையிட்டு விமர்சனம் செய்த போதிலும் பேராயர் அவர்கள் அதனைச்சட்டை செய்யாது தனது கொள்கைகளிலிருந்து எக்காரணம் கொண்டும் நிலை தளம்பாத காரணத்தினால் அவரது மேன்மைத்தரம் சர்வதேச அளவில் ஓங்கியது. அதுமட்டுமல்ல சுயநலத்தினாலும் போரசையாலும் உந்தப்பட்டு அரசியல் நிலைப்பாடுகளைச் சமரசம்செய்வதற்கு முற்பட்ட தமிழ் அரசியல்வாதிகளுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பேராயர் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தார். லஞ்ச ஊழல், போதைப்பொருள் கடத்தல்களுடன் தொடர்புபட்டிருந்த மக்கள் பிரதிநிதிகளையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் தட்டிக்கேட்டுக்கண்டனம் செய்யும் பேராண்மையை அருட்திரு இராயப்பு யோசேப் கொண்டிருந்தமை அரசியல் வாழ்வில் நேர்மை, நியாயம் என்பவற்றினைக் கடைப்பிடிக்கப் பெரிதும் உதவியது எனலாம்.

மொத்தத்தில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இலங்கைத்தமிழ் மக்கள் வாழ்வியலில் ஆன்மீகம், சமூதாய விழிப்புணர்வு, அரசியல் மேன்மை, விடுதலை வேட்கை, தமிழ்த்தேசியம் ஆகியவற்றின் பிரதிபலிப்பாக வியாபித்தருந்த மாபெரும் சக்தியாக பேராயர் அருட்திரு இராயப்பு யோசேப் விளங்கியது எவராலும் மறக்கவோ, மறுக்கவோ முடியாத விடயமாகும். மனித உரிமைகள் விடயத்தில் சட்டரீதியாக நீதிமன்றங்களிலும் வேறுபல பொது விடயங்களிலும் பேராயரின் வழிகாட்டலில் ஈடுபட்டுப்பணியாற்றியதைப் பெருமையுடன் நினைவுகொள்ளும் மனித உரிமைக்கும் அபிவிருத்திகுமான நிலையம் (CHRD) பேராயர் அருட்திரு இராயப்பு யோசேப் அவர்களின் மறைவினை ஓட்டி இலங்கையிலும் உலகெங்கும் பரந்துள்ள தமிழிமக்களின் ஆறாத சோகத்தில் பங்குகொள்வதுடன் தமிழ்ச்சமுதாயத்துக்கு வாய்த்த தவப்புதல்வனை, ஒப்பற்ற சரித்திரநாயகனை நன்றியுடன் நினைவுகொள்கிறது.

மனித உரிமைக்கும் அபிவிருத்திக்கான நிலையம் (CHRD) சார்பாக K.S.இரத்தினவேல் சட்டத்தரணி